## கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2017

கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் அதிகாரச்சட்டத்தின் 28(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2018 மார்ச் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஓய்வூதியத் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

ஓய்வூதியத் திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கடற்றொழில் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 3,297,559,198 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே திட்டத்தின் கடற்றொழில் ஓய்வூதிய நிதியம் ரூபா 2,656,607,635 மறைப் பெறுமதியாக இருந்தது. அதற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்றுவருகின்ற ஆயுள் பெறுமதி கணித்தல் மதிப்பீடு மற்றும் புதிய கடற்றொழிலாளர் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதுடன் ஒப்பிடுகையில் கடற்றொழில் ஓய்வூதியக் கொடுப்பனவு உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது. அதற்கிணங்க, இந்த பாதகமான நிதி நிலைமையானது எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றமடையும் என்பதாலும் இந்த நிலைமையிலிருந்து மீளுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்படாததனாலும் திட்டத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலானது நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 663,955,406 தொகையான பெற வேண்டிய கடன் மீதிகள் நியமத்தின் 64 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படாது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெற வேண்டிய மீதிகளாகக் காட்டப்பட்டிருந்தன.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 37

நியமத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு பங்களிப்புக்களும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்புக்களும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதிக்காகவும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் அது இடம் பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க ஓய்வூதியப் பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்யும் போது அதற்காக குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் செலுத்தக்கூடிய வட்டி வீதம், ஆட்சேர்ப்புக்கள், நீக்குதல், மரணங்கள், ஊனமடைதல்கள் ஆகிய அடிப்படைக் கூறுகள் மற்றும் செயற்பாட்டு பங்களிப்பாளர்களினதும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களினதும் மாற்றங்கள் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்படாமையின் காரணமாக 2007 ஆம் ஆண்டின் போது 54,248 ஆன செயற்பாட்டு பங்களிப்பாளர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டின் பொது 29,472 வரை அதாவது 46 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் அக்காலப்பகுதிக்கான நிதி ஏற்பாடு ரூபா 1,242,006,539 இலிருந்து ரூபா 3,297,559,198 வரை அதாவது 166 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

திட்டத்தின் மூலம் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட கடனும் ரூபா 518,000,000 அதன் அடிப்படையில் அறவிடப்பட்ட ரூபா 330,905,406 தொகையான கடன் வட்டி ஆகிய நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக அக்கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை மற்றும் முழுத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,417,697 மொத்த தொகையான கணக்காய்வு கட்டணங்கள் தீர்த்து வைக்கப்படாது 1998 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்படுகின்றன.

(ஆ) செலுத்த வேண்டிய அச்சிடல் செலவுகளுக்காக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 515,000 மொத்த தொகையான பணம் தீர்த்து வைக்கப்படாது 2011 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்படுகின்றன.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகள் ஓய்வூதிம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திற்காக பல சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட கடனுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 663,955,406 மொத்த தொகையான கடனையும் வட்டியையும் அறவிடுதல், செயல் முன்னேற்றம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகாரச் சட்டம் | |
| | (i) 16 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கத்துவர் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய அங்கத்தவர்களின் அங்கத்துவத்தை செல்லுபடியற்றதாக்குவது சம்பந்தமாக உரிய அங்கத்துவர்களுக்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக செல்லுபடியற்றதாக்கப்பட்ட அங்கத்துவத்தை மீண்டும் செல்லுபடியாக்குவதற்கு பங்களிப்பாளர்களுக்கு உள்ள உரிமையும் இழக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 28,891,442 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,420,592 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 26,470,850 ஆல் அதாவது 1094 சதவீதத்தால் ஒரு முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது இலங்கை வங்கிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு சபைக்கு சாதகமானது எனத் தீர்மானிக்கப்பட்டதனால் பெற வேண்டிய பணத்தில் ஒரு பகுதியாகிய ரூபா 37,672,911

தொகையான சபைக்கான பெறுவனவு மேற்கூறிய மிகை ஏற்படுவதற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 12,194,196 மிகையினை ஏற்படுத்தியிருந்த போதிலும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அது படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முறையே ரூபா 7,170,305 மற்றும் ரூபா 15,147,293 பற்றாக்குறையினை ஏற்படுத்தியிருந்தது. எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மீண்டும் ஒரு மிகை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 28,891,442 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறிய நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை, நடைமுறையற்ற சொத்துக்கள் என்பவற்றுக்கான பெறுமானத்தேய்வை மீண்டும் செம்மையாக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 14,622,327 தொகையான பங்களிப்பு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,358,373 மற்றும் ரூபா 11,983,314 தொகைகளான மறைப் பெறுமதி வரை பின்னடைவு ஏற்பட்டிருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மீண்டும் முறையே ரூபா 5,601,658 மற்றும் ரூபா 32,281,870 வரை திட்டத்தின் பங்களிப்பு படிப்படியாக முன்னேற்றமடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான நிதி விளைவு தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2017 | 2016 | வேறுபாடு அதிகரித்தல் / (குறைவடைதல்) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 58,753,600 | 63,046,648 | (7) |
| கடற்றொழிலாளர்களின் பங்களிப்பு பணம் | 920,022 | 928,732 | (1) |
| மீண்டுவரும் செலவுகளுக்கான மானியம் | 1,500,000 | 1,500,000 | - |
| ஏனைய வருமானம் | 37,672,912 | - | 100 |
| மொத்த வருமானம் | 98,846,534 | 65,475,380 | 51 |
| **கழித்தல் - செலவுகள்** | | | |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | (59,897,422) | (53,821,700) | 11 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (3,865,686) | (4,148,448) | (7) |
| நிர்வாக மற்றும் நிதிச் செலவுகள் | (6,191,984) | (5,084,640) | 22 |
| மொத்தச் செலவுகள் | (69,955,092) | (63,054,788) | 11 |
| வருடத்துக்கான இலாபம் / (நட்டம்) | 28,891,442 | 2,420,592 | |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் மொத்த பங்களிப்பு ரூபா 920,022 ஆக இருந்த போதிலும் மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூபா 59,897,422, தேறிய தவணைக் கொடுப்பனவுகள் ரூபா 1,354,615, மரணப் பலவீன நலக் கொடுப்பனவுகள் ரூபா 463,800 ஆக இருந்ததனால் பங்களிப்பை மிகைத்த கொடுப்பனவுகள் ரூபா 60,795,815 அல்லது 6,608 சதவீதம் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கடற்றொழிலாளர் பங்களிப்பு பணம் ஒரு சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 11 சதவீதத்தாலும் ஓய்வூதிய பொறுப்புக்கள் 8.8 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

(ஆ) திட்டத்தின் பிரதான வருமானம் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் பங்களிப்பு பணமாக இருக்க வேண்டிய போதிலும் பிரதான வருமானம் மீளாய்வாண்டின் போது வட்டி வருமானத்தில் 55 சதவீதம் அதாவது ரூபா 54,394,779 விவசாயிகள் திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடனின் அடிப்படையில் அறவிட்ட வட்டி வருமானத்தினை உள்ளடக்கியிருந்தது.

(இ) பாதீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு புதிய 100 பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 109 பங்களிப்பாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். எனினும், மீளாய்வாண்டின் போது 144 பங்களிப்பாளர்கள் திட்டத்திலிருந்து விலகியிருந்தார்கள்.

### 3.3 நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

சபையினால் 1996 ஆம் ஆண்டின் போது திறைசேரி உண்டியல்களில் மேற்கொண்ட முதலீடுகள் முதிர்ச்சியடையும் போது இலங்கை வங்கி தவறுதலாக நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் கடற்றொழில் ஓய்வூதிய நிதியத்திற்குச் சேர வேண்டிய வட்டியை அறவீடு செய்வதற்காக அந்த வங்கிக்கு எதிராகச் சபையினால் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. அதற்காக 2003 ஒக்தோபர் 07 ஆந் திகதி வழக்கு கட்டணமும் உள்ளடக்கி இழக்கப்பட்ட வட்டியையும் பணத்தையும் சபைக்கு வழங்குவதற்கு மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பே 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூலமும் வழங்கப்பட்டிருந்தது. சபையின் கணிப்பின் பிரகாரம் 2017 மார்ச் 31 ஆந் திகதி இலங்கை வங்கியிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 103,248,251 ஆகக் காணப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி ரூபா 31,618,396 மற்றும் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி ரூபா 6,054,515 ஆக ரூபா 37,672,911 மொத்த தொகை மாத்திரம் வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட தீர்ப்பை அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தாமதித்தல், உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை என்பவற்றின் காரணமாக மிகுதிப் பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக மீண்டும் 2017 யூலை 25 ஆந் திகதி நிறுவனத்தினால் இலங்கை வங்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கடற்றொழிலாளர்கள் வயதான காலத்தின் போது அல்லது பலவீனத்தின் போது கடற்றொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்குதல், கடற்றொழிலாளர் மரணமடையும் போது அக்கடற்றொழிலாளரின் தங்கி வாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், புதிய வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காக கடற்றொழிலாளர்களை ஊக்குவித்தல், இளைஞர்களை மீன்பிடித் தொழிலுக்கு அனுப்பி வைத்தல், கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல், சிக்கனத்தை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 – 2016 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது 2014 ஆம் ஆண்டின் பின்னர் நிதியம் தேய்வடையும் நிலை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டின் போது அது பூச்சிய நிலை காணப்பட்டதனால் அதனை மறுசீரமைப்புச் செய்ய வேண்டுமென முகாமைத்துவத்தால் இனங்காணப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்தும் எதுவித மறுசீரமைப்பு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) தமது வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காக மீனவர்களை ஊக்குவித்தல், இளைஞர்களை மீன்பிடிதொழிலுக்கு அனுப்பிவைத்தல், கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல், சிக்கனத்தை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக திட்டம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 3,684,000 தொகையான பங்களிப்பு பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் உள்ளபடியான பங்களிப்புப் பணப் பெறுவனவுகள் ரூபா 920,022 மாத்திரமாக இருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பங்களிப்பு நலக்கொடுப்பனவு தாமதமடைதல், கடற்றொழிலாளர்கள் திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்களை எதிர்பாராத வகையில் இழத்தல், பங்களிப்பாளர்கள் தொடர்பான தகவல்களை நாளது வரையாக்காமை, ஆட்சேர்ப்பு முறைமை படிப்படியாக வீழ்ச்சியடைதல் என்பவற்றின் மூலம் தொழிலில் ஈடுபடுத்துவதில் குறைந்த போக்கு, சேமிக்கும் பழக்கம் இல்லாமல் போதல் ஆகிய காரணத்தால் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்திலிருந்து மீனவ சமூகத்திற்கு வழங்கக்கூடிய சேவைகள் ஆக்கபூர்வமாகவும், வினைத்திறனாகவும் எதிர்பார்க்கப்பட்டவாறும் நிறைவேற்றப்படாத நிலைமை காணப்படவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவுகளுக்குமிடையே 34 சதவீதத்திலிருந்து 110 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திட்டம் தொடர்பான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதியம் நிலைத்திருத்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை உருவாகி இருந்த போதிலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்காமையால் உருவாகக் கூடிய நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு நிறுவனத்தில் எதுவித ஆயத்தமோ அல்லது திட்டமோ இருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காலத்துக்கு காலம் காப்புறுதிச் சபையின் தலைவரின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்பு |
| --- | --- | --- |
| (அ) | பங்களிப்பு பண முகாமைத்துவம் | செலுத்துவதற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதியங்களிலிருந்து செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணத்தை உரிய காலத்தில் மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | முகாமைத்துவ தகவல் முறைமை | (i) நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட அலுவலகத்தினூடாக அனுப்பிவைக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்களை ஓய்வூதியப் பிரிவில் ஆவணப்படுத்தாதனால் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்படிவங்களின் அளவு, தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள அளவு, தயாரிக்கப்பட வேண்டியுள்ள அளவு என்பவற்றை இலகுவாக இனங்காணக் கூடிய ஒரு முறைமை காணப்படவில்லை. |
| | | (ii) தகவல்களை ஆவணப்படுத்தாமையின் காரணமாக ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த விண்ணப்பப் படிவங்களின் அளவினுள் ஓய்வூதியக் கொடுப்பனவு தேறிய தவணைப் பணக் கொடுப்பனவு, பலவீன பணிக்கொடைக் கொடுப்பனவு என்பனவாகப் பிரிக்கப்பட்ட அளவுகளை இலகுவாக இனங்கண்டு அது தொடர்பான பகுப்பாய்வினைச் செய்ய முடியாமை |
| | | (iii) வாழ்க்கைத் தரவுத் தகவல்களை நாளதுவரையாகப் பேணாமை. |